# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No.41/2022

PW2 கலையரசன் நாள் 15.03.2024

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் ஊரலி கவுண்டர் சமுதாயத்தை சேர்ந்தவர். வாதி குரும்பா கவுண்டர் சமுதாயத்தை சேர்ந்தவர். இருவரும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர் அல்ல. நீதிமன்றம் மூலம் அழைப்பாணை வந்து சாட்சி சொல்லவரவில்லை. வாதியும் பிரதிவாதியும் சேர்ந்து சாட்சி சொல்ல அழைத்தன்பேரில் வந்தேன். எனக்கு வழக்கின் எண் தெரியாது. வாதிக்கு பிரதிவாதி ஈட்டுகடன் பதிவு செய்வதற்கு முன்பாகவே பணம் கொடுத்தார். அதில் எல்லாம் 100 ரூபாய் நோட்டுக்களாக தான் இருந்தது. நான் பத்திர அலுவலகத்திற்கு வேறு வேலையாக போயிருந்தேன்/ அப்போது வாதி பிரதிவாதி இருவரும் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடா சொன்னார்கள் போட்டேன். இந்த விவரத்தை நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. பணத்தை நான் எண்ணி பார்க்கவில்லை. அந்த பணக்கட்டில் ரூ.6 இலட்சம் இருந்ததாக வசந்தா சொன்னார். வசந்தா கைரேகை வைத்தார். பிறகு என்னை சாட்சி கையெழுத்து போடசொன்னார்கள் போட்டேன். பணத்தை வாதியின் மகன் வாதியிடம் பணத்தை கொடுத்து வாதி வசந்தாவிடம் பணம் கொடுத்தார். ஈட்க்கடன் பத்திரத்தை படித்து காண்பித்தார்கள். நான் படித்து பார்க்கவில்லை. என்னிடம் வாதி பிரதிவாதிக்கு அசலும் வட்டியும் கொடுத்ததாக இருவரும் சொல்லவில்லை. 2–வதாக சாட்சி கையெழுத்து போட்ட செந்தில் குமார் என்னுடைய நண்பர் அல்ல. ஊர்காரர் . அவருக்கு கொடுக்கல் வாங்கல் தெரியும். ஈட்டுக்கடன் பதிவு செய்து 8 வருட கழித்து தான் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு வருடம் தெரியவில்லை. தாவா சொத்தின் பட்டா எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியும். ஈட்டுக்கடன் பத்தித்தில் வாதி பத்திர எழுத்தர் முன்பாக ரேகை வைத்தாரா, பதிவாளர் அலுவலகத்தில் ரேகை வைத்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. பத்திரத்தில் கைரேகைக்கு பக்கத்தில் கீரல் வசந்தா என்று எழுதியுள்ளது யார் எழுதியது என்று ஞாபகமில்லை. பத்திரம் தயார் செய்த பத்திர எழுத்தர் பெயர் குரு. பிரதிவாதியின் கிரைய அசல் பத்திரம் வாதியிடம் கொடுத்தாரா என்று ஞாபகமில்லை. பிரதிவாதியின் இடம் ரோட்டின் அருகாமையில் உள்ளது. ஈட்டுக்கடனின் காலகெடு 3 ஆண்டுகள்– அந்த 3 ஆண்டுகள் கழித்து பிரதிவாதி பெயரில் வாதியோ, அவரது மகனோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. ஈட்டுக்கடன் சொத்து இன்று வரை பிரதிவாதி அனுபவத்தில் தான் உள்ளது. ரசீது யார் பெயரில் உள்ளது என்று எனக்கு நேரில் தெரியாது. வாதியும் அவரது மகனும் ஊரில்

நிறைய பேருக்கு வட்டிக்கு பணம் கொடுக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. ஈட்டுக்கடன் பத்திரம் பதிவு செய்யும்போது யார் யார் இருந்தார்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நிறைய பேர் இருந்தார்கள். அவர்களுடைய பெயர் எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் தனக்கு ஞாபகமில்லை என்று சொல்கிறார். வாதி பிரதிவாதிக்கு எவ்வளவு வட்டிக்கு கொடுத்தார் என்று கேட்டால் 2 வட்டிக்கு கொடுத்தார். பிரதிவாதிக்கு வாதி 5 இலட்சத்தை கொடுத்து 6 லட்சம் என்று பத்திரம் போட்டது எனக்கு தெரியும் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. ஈட்டுக்கடன் பத்திரத்தை ரத்து செய்ய கோரி OP.26/2022 பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது.ஈட்டுக்கடன் பத்திரம் பதிவு செய்த நாளிலிருந்து அசலுக்கு மேல் வட்டி கொடுத்துள்ளார் என்று சொன்னால் பணம் கொடுத்தாகவோ, வாங்கியதாகவோ இருவரும் என்னிடம் சொல்லவில்லை. பஞ்சாயத்து தலைவர் என்ற முறையில் நான் சாட்சி சொல்ல வந்த பிறகு பிரதிவாதியிடம் நான் பேசி முடிப்பதற்கு 10 இலட்சம் எடுத்து கொண்டு வரவேண்டும் என்றும், நான் பேசிவிடுவதாகவும், பத்திரத்தை ரத்து செய்து தருவதாகவும், அதற்கு எனக்கு கமிசனாக ரூ.1 இலட்சம் கொடுக்கவேண்டும் என்று பணம் கேட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக்கொள்வதாக சொல்லிவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு 1 இலட்சம் கொடுக்கவில்லை என்றால் வாதி என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிப்பேன் என்று பிரதிவாதியிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.